# அக்டோபர் – 16 – திங்கள்

## புனித எட்விச்

**“இயேசுகிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்க அழைப்புப் பெற்றிருக்கிறீர்கள்” உரோ 1:7**

### முதல் வாசகம் : உரோமையர் 1 : 1 – 7

கடவுளின் அன்பைப் பெற்று இறைமக்களாக அழைக்கப்பட்டுள்ள உரோமை நகர மக்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் பணியாளனும் திருத்தூதனாக அழைப்புப் பெற்றவனும் கடவுளின் நற்செய்திப் பணிக்கென ஒதுக்கி வைக்கப்பட்டவனுமாகிய பவுல் எழுதுவது நற்செய்தியைத் தருவதாகக் கடவுள் தம் இறைவாக்கினர் வழியாக ஏற்கெனவே திருமறை நூலில் வாக்களித்திருந்தார். இந்த நற்செய்தி அவருடைய மகனைப்பற்றியதாகும். இவர் மனிதர் என்னும் முறையில் தாவீதின் வழிமரபினர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில் வல்லமையுள்ள இறைமகன். இவர் இறந்து உயிர்த்தெழுந்ததால் இந்த உண்மை நிலைநாட்டப்பட்டது. இவரே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. பிற இனத்தார் அனைவரும் இவர்மீது நம்பிக்கை கொண்டு இவருக்குக் கீழ்ப்படியுமாறு இவர் பெயர் விளங்க இவர் வழியாகவே நாங்கள் திருத்தூதுப்பணி செய்வதற்குரிய அருளைப் பெற்றுக்கொண்டோம். பிற இனத்தவராகிய நீங்களும் இயேசுகிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்க அழைப்புப் பெற்றிருக்கிறீர்கள். நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்

### நற்செய்தி : லூக்கா 11 : 29 - 32

அக்காலத்தில் மக்கள் கூட்டம் வந்து கூடக்கூட இயேசு கூறியது: ”இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத்தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது.யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிட மகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்புநாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா!தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!“என்றார்.

**தியானம்:** திரு முழுக்கின் வழியாக நாம் அனைவரும் கிறிஸ்துவிற்கு உரியவர்களாக மாறியுள்ளோம். ஆனால் அவ் அழைபிற்கு ஏற்ற வாழ்வை நாம் வாழ்கிறோமா? கிறிஸ்தவம் அன்பு, மன்னிப்பு, பணிவு, தாழ்ச்சி ஆகிய பண்புகளை கொண்டது. இது நமது வாழ்வில் உண்டா? இவ்வுலக வாழ்வு இறைவன் நமக்கு தந்த கொடை. அதை எவ்வாறு நாம் வாழ்கிறோம்? இன்று உலக நாடுகளில் போட்டி அதிகம். .யார் பெரியவர், யார் வல்லரசு என்ற போட்டியால், அணுகுண்டு தயாரிப்பதிலும் அதனை சோதனை செய்வதிலும் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இவற்றை யாரை அழிக்க பயன்படுத்தப் போகிறார்கள்? நாட்டையா?, மக்களையா? இயற்கையின் அழிவுகள் இன்று ஏராளம். அண்மையில், கனடாவின் மொண்ரியல் நகரமும், அமெரிக்காவின் டெக்சாஸ் நகரமும் பாரிய வெள்ளப்பெருக்கை சந்தித்தன. இவை எல்லாம் எமக்கு ஒரு எச்சரிக்கை. அன்று நினிவே மக்கள் பாவ வாழ்வு வாழ்ந்த போது இறைவன் யோனாவை அனுப்பினார். நினிவே மக்களிற்கு பயந்த யோனா அங்கு செல்லாமல் பாதை மாறியபோது, கடவுள் மீனின் வழியாக அவரை நினிவேக்கு அனுப்பினார். பொல்லாத மக்கள் என்று யோனாவினால் கணிக்கப்பட்டவர்கள் மனம் மாறவில்லையா? எனவே நமது வாழ்விலும் மாற்றம் வரட்டும். எம்மையும், எமது மக்களையும் அது காக்கட்டும்.